இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை

**STP 9632– கல்வியில் கணினித் தொழில்நுட்பம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.06.2023 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

- எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக

1. "கட்டமைக்கும் சீரமைப்பு (Constructive alignment) என்பது கற்பித்தலுக்கான ஒரு வடிவமைப்பாகும். இதில் மாணவர்கள் எதைக் கற்க வேண்டும் மற்றும் அவர்கள் தங்கள் கற்றலை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் போன்ற விடயங்கள் கற்பித்தல் நடைபெறும் முன் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (Biggs, 2014)

   I. தெரிவு செய்யப்பட்ட பாடஅலகில், உங்கள் மாணவர்களுடன் செயற்படுத்தப்பட்ட கற்றல் அனுபத்திலிருந்து ஆக்கபூர்வமான சீரமைப்பை உதாரணங்கள் தந்து விபரிக்குக.

   (40 புள்ளிகள்)

   II. காட்சி அமைப்பு மற்றும் எண்ணக்கருக்களை பிரதிநித்துவம் செய்யும் ஓர் எண்ணக்கரு படம் கற்றல் அனுபவங்களை வடிவமைக்க எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்குக.

   (30 புள்ளிகள்)

   III. கற்றல் அனுபவங்களை வடிவமைப்பதில் உள்ள கற்பித்தலின் ஆரம்பத்தத்துவ அடிப்படைகளை (Meril, 2012) பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

   (30 புள்ளிகள்)

2. ஆசிரியரின் வகிப்பங்கு "பாட உள்ளடக்கத்தை கடத்துபவர்" என்பதிலிருந்து "கற்றலை சாத்தியப்படுத்துனராக" மாற்றமடைந்துள்ளது.

   I. நீங்கள் கற்பிக்கும் பாடஅலகுடன் தொடர்பாக **ஐந்து (05)** தகவல்களை தந்து கற்றலை எவ்வாறு எளிதாக்கலாம் என்பதை விளக்குக.

   (30 புள்ளிகள்)

   II. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கற்றலை எவ்வாறு அர்த்தமுள்ளதாக மாற்றுவது என்பதைப் பொருத்தமான உதாரணங்களைக் காட்டி விவரிக்குக.

   (30 புள்ளிகள்)

   III. ஒரு குறிப்பிட்ட பாடஅலகில் உள்ள மாணவர்களுக்கு நீங்கள் வடிவமைத்த கற்றல் அனுபவத்தை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அர்த்தமுள்ளதாக மாற்றிய விதத்தை விளக்குக.

   (40 புள்ளிகள்)

3. பல்வேறு காரணங்களால் தற்போதைய சூழலில் எண்ணிம கற்றல் மிகவும் பயனுள்ளதாக மாறியுள்ளது.

I. பொருத்தமான உதாரணங்களை மேற்கோள் காட்டி எண்ணிம கற்றலின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குக.

(30 புள்ளிகள்)

II. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடஅலகின் கற்றல் செயன்முறைக்கு ஆதரவாகப் பயன்படுத்தக்கூடிய **ஐந்து** (05) மென்பொருள் வகைகள்/எண்ணிமக் கருவிகளை விளக்குக.

(30 புள்ளிகள்)

III. உங்கள் பாடஅலகுகளில் எண்ணிமக் கருவிகளைப் பயன்படுத்துவதில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் ஆகக்குறைந்தது ஐந்தினையும், மேலும் அச்சவால்களைச் சமாளிப்பதற்கான உத்திகளைப் பற்றி பிரதிபலிப்பு செய்க.

(40 புள்ளிகள்)

4. கற்பித்தல் - கற்றல் செயன்முறையை மேம்படுத்துவதற்கான ஓர் ஊடகமாக உலகளாவிய இணையம் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

I. நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் கற்பித்திலின் தேவைகள் ஐந்தினையும் மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றி, பொருத்தமான உதாரணங்களை தந்து ஆராய்க.

(30 புள்ளிகள்)

II. இணைய அடிப்படையிலான கற்றல் சூழலில், அர்த்தமுள்ள கற்றலுக்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பண்புகள் ஐந்தினை (05) விவரிக்குக.

(30 புள்ளிகள்)

III. LMS களுடனான கற்றலில் உங்கள் தனிப்பட்ட அனுபவங்களைப் பிரதிபலிக்குக. LMS களின் அடிப்படைகள் குறிப்பிட்ட கற்றல் சூழலில் எவ்வாறு வினைத்திறனாக இணைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்க

(40 புள்ளிகள்)

5. கல்வித் நிகழ்ச்சித்திட்டத்தின் விருத்தியின் போது மதிக்கப்பட வேண்டிய அடிப்படை அம்சங்கள் போதனாசார் வடிவடைப்பு மாதிரி உருக்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

I. TEL சாதனங்களை உருவாக்குவதில் ADDIE போதனாசார் வடிவமைப்பு மாதிரி உருவின் பயன்பாட்டை விளக்குக.

(30 புள்ளிகள்)

II. நீங்கள் உருவாக்கிய TEL சாதனத்தினை பின்வரும் அம்சங்களின் கீழ் மதிப்பீடு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய நான்கு (04) வடிவமைப்பு அம்சங்களை விளக்குக.

- மதிப்பீட்டு வினாக்களை தீர்மானித்தல்.
- மதிப்பீட்டு பிரமாணங்களை உருவாக்குதல்.
- பொருத்தமான மதீப்பீட்டுக் கருவிகளைத் தெரிவுசெய்தல்.

(40 புள்ளிகள்)

III. பண்புசார் தரவுகளைச் சேகரிக்க நான்கு (04) வடிவமைப்பு அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில், மதிப்பீட்டுக் கருவியொன்றை உருவாக்குக.

(30 புள்ளிகள்)

6. OER ஆனது மாணவர்களின் கற்றலை அதிகரிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. அதே சமயம் கொள்வனவு செய்தல் மற்றும் அணுகுதல் என்பவற்றில் உள்ள தடைகளையும் உடைக்கிறது.

I. Creative Common Licence வகைகளை பொருத்தமான முறையில் மேற்கோள் காட்டி OER இன் 5R மாதிரி சட்டகத்தை விளக்குக.

(30 புள்ளிகள்)

II. OER கள் மூலம் கல்வியில் "திறந்த தன்மை" எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது என்பதை பொருத்தமான உதாரணங்களைக் காட்டி விவரிக்குக.

(40 புள்ளிகள்)

III. உங்கள் கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறைக்கு OER களைப் பயன்படுத்துவதில் நீங்கள் எதிர்கொள்ளும் மூன்று (03) நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அவற்றைக் குறைக்க நீங்கள் பின்பற்றிய உத்திகள் ஆகியவற்றை விளக்குக.

(30 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -